**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 182/2019 |
| Name | : Muthusamy |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.06.2026**

**எதிரிகள் 1 , 2 மற்றும் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**3ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மத்திய நுண்ணறிவு பிரிவு கோவை மண்டலத்தில் பணியாற்றி வருகிறேன். கடந்த 13.04.2016 அன்று மடத்துக்குளம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்த போது உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த நாகராஜ் மகன் ராம்குமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 103/2016 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக

காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) புகார் வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டது. நான் வாக்குமூலம் வாங்கும் போது மாலை 04.00 மணி இருக்கும். முதல் தகவல் அறிக்கையை நான் தான் எழுதி பதிவு செய்தேன். புகார் வாக்குமூலத்தில் எங்கள் வீட்டு அருகே வசிக்கும் சதாசிவம் குடும்பம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே வசிக்கும் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் 3 வது காலத்தில் தகவல் கிடைத்த நாள் 13.04.2016 நேரம் 17.30 மணி என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் 12 வது காலத்தில் முதல் வரியில் நேரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டாவது வரியில் மடத்துக்குளம் GH என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். 12 வது காலத்தில் புகாரைப் பெற்ற தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் முதல் பக்கத்திற்கும், இரண்டாம் பக்கத்திற்கும் உள்ள சங்கதிகள் எழுதப்பட்டுள்ள கையெழுத்து மாறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. இரண்டு பக்கத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். முதல் தகவல் அறிக்கை என்னால் பதிவு செய்யப்படவில்லை என்றும் வேறு யாரோ எழுதியதில் நான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் எழுதியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.08 17:45:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்